# முல்லைத்தீவு மனிதப் புதைகுழிக்கு நீதி கோரி வெள்ளியன்று ஹர்த்தால்

## வடக்கு - கிழக்கு தழுவிய ரீதியில் முன்னெடுக்க காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் அழைப்பு




முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழிக்கு நீதி கோரி வடக்கு - கிழக்கு தழுவிய ரீதியில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பூரண ஹர்த்தாலை மேற்கொள்ள வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் இன்று திங்கட்கிழமை நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் இந்த ஹர்த்தாலுக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் வெள்ளிக்கிழமை, பேரணி ஒன்று, வட்டுவாகல் பாலத்தில் ஆரம்பித்து முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தை சென்றடைவதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், பேரணியில் கலந்துகொள்வோருக்கான போக்குவரத்து ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன.

குறித்த ஹர்த்தாலுக்கு அனைத்துத் தரப்பினரும் அரசியல் கட்சிகளும் எவ்வித பேதமுமின்றி ஆதரவளிக்க வேண்டும் என்பதுடன் அன்றைய தினம் வெள்ளிக்கிழமை வர்த்தகர்கள், விவசாயிகள், கடற்றொழிலாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என அனைத்துத் தரப்பினரும் ஆதரவளித்து, முல்லைத்தீவில் நடைபெறவுள்ள போராட்டத்திலும் பங்கேற்க வேண்டும் எனவும் வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் சங்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 08 திங்கட்கிழமை 24.07.2023 கதிர் 35

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

## ரணிலின் கருத்து மீண்டுமொரு கறுப்பு ஜூலையை தோற்றுவிக்கும் - சுமந்திரன்



இலங்கை அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் உள்ள அதிகாரப் பகிர்வை வழங்க நாடாளுமன்றம் அனுமதிக்க வேண்டும், என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார்.

தற்போதைய நாடாளுமன்றத்துக்கு மக்கள் ஆணை கிடையாது. இந்த ஜனாதிபதியும் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர் அல்ல, எனவே மக்கள் ஆணை இல்லாதவர்கள் நாடாளுமன்றம் அனுமதிக்க வேண்டும் என்று கூறுவது மீண்டும் ஒரு கறுப்பு ஜூலையையே தோற்றுவிக்கும் என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மீண்டுமொரு கறுப்பு ஜூலை வேண்டாம் என்ற தொனிப்பொருளில் கொழும்பில் உள்ள கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி நிறுவனத்தில் ஜனநாயக சீர்த்திருத்தங்களுக்கான மக்கள் இயக்கம்

2➤

## கடற்படையினருக்குக் காணி அளவீடு மக்கள் போராட்டத்தால் இடைநிறுத்தம்



யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கில் பொதுமக்களுக்குச் சொந்தமான காணியைக் கடற்படையினருக்கு நிரந்தரமாகச் சுவீகரிக்கும் நோக்குடன் அதனை அளவீடு செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சி கடும் எதிர்ப்புக் காரணமாக தற்காலிகமாகக் கைவிடப்பட்டது.

முள்ளியான் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட (ஜே/433) கட்டைக்காடு பகுதியில் கடற்படை முகாம் அமைந்திருக்கும் ஒன்றரைப் பரப்புக் காணியை கடற்படையினருக்காக அளவீடு செய்யும் நடவடிக்கை இன்று காலை மேற்கொள்ளப்படவிருந்த நிலையில், அங்கு ஒன்றுகூடிய பிரதேச மக்களும் அரசியல் பிரமுகர்களும் கடும் எதிர்ப்பைக் காட்டினர். இதையடுத்து காணி அளவிடும் பணி தற்காலிகமாகக் கைவிடப்பட்டது.

இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் பிரதேச மக்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.

## இலங்கைக்கான நோர்வே தூதரகம் மூடப்படுகிறது!

இலங்கைக்கான நோர்வே தூதுவர் அலுவலகத்தை எதிர்வரும் 31 ஆம் திகதியிலிருந்து மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுடனான இருதரப்பு தொடர்புகளை இந்தியாவின் புதுடில்லியில் உள்ள நோர்வே தூதுவர் அலுவலகத்தினூடாக முன்னெடுக்கவுள்ளதாக நோர்வே தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் உள்ள தனது பணியிடங்களில் பல மாற்றங்களைச் செய்வதாகவும், கொழும்பில் உள்ள நோர்வே தூதரகம் உட்பட ஐந்து வெளிநாட்டுத் தூதரங்களை மூடவுள்ளதாகவும் கடந்த ஆண்டு நோர்வே வெளிவிகார அமைச்சு அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## கொழும்பு - யாழ் புகையிரத சேவை மீண்டும் ஆரம்பம் கடவைகளில் அவதானத்தோடு செல்லுமாறு கோரிக்கை

5 மாதங்களின் பின்னர் மீண்டும் 15 ஆம் திகதி தொடக்கம் கொழும்பு - யாழ்ப்பாணம் புகையிரத சேவை மீண்டும் வழமைபோல் ஆரம்பித்துள்ளது.

இந்த நிலையில் தற்பொழுது புகையிரதக் கடவையில், புகையிரதம் வருவதாற்கான சமிக்கை காட்டப்பட்ட நிலையிலும் அதனைப் பொருட்படுத்தாது மீறி சிலர் செல்கின்றனர். இதன் காரணமாகவே பல உயிர்கள் காவு கொள்ளப்படுகின்றன, என்று கிளிநொச்சிபுகையிரத அதிபர் திரு புத்திகாமிணி பரமசிகாமணி தெரிவித்துள்ளார்.

எனவே மக்கள் மிகவும்

2➤

## நிம்மதியைத் தேடும் தமிழர் தனிநாட்டைக் கோரவில்லை!

### பிரதமர் தினேஷ் தெரிவிப்பு



தமிழ் மக்கள் நிம்மதியுடன்தான் வாழ விரும்புகின்றார்கள். அவர்கள் ஒற்றையாட்சி வேண்டும் என்றோ சமஷ்டி வேண்டும் என்றோ விடுதலைப் புலிகள் கோரிய தனிநாடு வேண்டும் என்றோ ஒருபோதும் கோரவில்லை!, என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்திருக்கிறார்.

தமிழர்கள் ஒற்றையாட்சியைக் கோருகின்றார்களா? சமஷ்டியாட்சியைக் கோருகின்றார்களா? தனி நாட்டைக்

2➤

## இலங்கையில் இந்தியா காலூன்ற இடமளியாராம்! நில இணைப்புக்கு எதிராக வீரசேகர போர்க்கொடி

இந்தியாவானது இலங்கையில் காலூன்ற நாடாளுமன்றத்தில் பிரதிநிதிகளாக இருக்கும் எவரும் கை உயர்த்தக்கூடாது. அது நாட்டின் பாதுகாப்புக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாகும்!, என்று இவ்வாறு ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணத்தின்போது இலங்கையையும் இந்தியாவையும் நில ரீதியாக இணைப்பது தொடர்பான சாத்தியப்பாட்டு ஆய்வுக்கு இணக்கம் காணப்பட்டது. இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே சரத் வீரசேகர மேற்கண்டவாறு கூறினார்.

முன்னாள் கடற்படைத் தளபதி என்ற ரீதியிலும் மக்களின் பிரதிநிதி என்ற ரீதியிலும் இந்தக் கருத்தை அரசிடம் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்தியா காலூன்றினால்

2➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரேயொரு மாலை இதழ்

## வறுமையை உணரும் நாள் வெகு தொலைவில் இல்லை!

### உலக வங்கி எச்சரிக்கை

*இலங்கையில், பலர் வறுமையை உணரும் நாள் வெகு தூரத்தில் இல்லை, என இலங்கைக்கான உலக வங்கியின் பணிப்பாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.*

*இலங்கை எதிர்நோக்கி வரும் பொருளாதார நெருக்கடி இயற்கையாக ஏற்பட்ட நெருக்கடியல்ல, தவறான பொருளாதார முகாமைத்துவம் காரணமாக ஏற்பட்டது என நேபாளம், மாலைதீவு மற்றும் இலங்கைக்கான உலக வங்கியின் பணிப்பாளர் பொரிஸ் ஹடாட் சர்வோஸ் தெரிவித்துள்ளார்.*

*இது மனிதர்களால் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட நெருக்கடி. இதன் காரணமாக வெளிநாட்டுக்கடன் பெருமளவில் சேர்ந்தது என அவர் தெரிவித்துள்ளார்.*

*2021 ஆம் ஆண்டு மற்றும் 2022 ஆம் ஆண்டு காலத்தில் இலங்கையின் வறுமை 13.1 சத வீதத்தில் இருந்து 25 சத வீதமாக, இரண்டு மடங்காக – அதிகரித்தது.*

*2023 ஆம் ஆண்டின் இறுதியில் இந்த வறுமை மேலும் 2.4 சத வீதத்தினால் அதிகரிக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (க)*

## யாழ் பல்கலையில் உணவுத் திருவிழா





யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ மற்றும் வணிக பீடத்தில், சுற்றுலா விருந்தோம்பல் முகாமைத்துவ கற்கைகள் துறை இரண்டாம் வருட மாணவர்களின் ஏற்பாட்டில் உணவுத் திருவிழா இன்றையதினம் இடம்பெற்றது.

திருநெல்வேலி பால் பண்ணையில் அமைந்துள்ள முகாமைத்துவ மற்றும் வணிக பீட வளாகத்தில் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் இந்த உணவுத் திருவிழா ஆரம்பமானது.

உணவுத் திருவிழாவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா ஆரம்பித்து வைத்ததுடன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ மற்றும் வணிக பீட பீடாதிபதி பா.நிமலதாசன், சுற்றுலா விருந்தோம்பல் முகாமைத்துவ கற்கைகள் துறைதயின் தலைவரும் பேராசிரியருமான சுபேசன் உள்ளிட்ட விரிவுரையாளர்கள், மாணவர்கள், பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

தமிழ் சிங்கள இஸ்லாமிய கலாசார உணவு வகைகள் மற்றும் மேலைத்தேய உணவு வகைகள், பானங்கள் என பல்வேறுபட்ட உணவுகளும் காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டன.

இரண்டாம் ஆண்டு முதலாம் அரையாண்டில் கல்வி கற்கும் மாணவர்களின் முயற்சியாண்மையை விருத்தி செய்யும் நோக்கில் குறித்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

## நாமலுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு



முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ச மற்றும் சிலர், நிறுவனம் ஒன்றில் 30 மில்லியன் ரூபாவை முதலீடு செய்தமைக்கு எதிராக பணமோசடித் தடுப்புச் சட்டத்தின் கீழ் சட்டமா அதிபர் வழக்கொன்றினைத் தாக்கல் செய்திருந்தார்.

குறித்த வழக்கினை விசாரிக்க கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதை அடுத்து,

இந்த வழக்கு இன்று திங்கட்கிழமை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் அரசுத் தரப்பு விசாரணை நிறைவடைந்துள்ளதுடன், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 200 ஆவது பிரிவின் கீழ், தற்காப்பு சாட்சியத்தை அழைக்காமல், பிரதிவாதிகளை விடுவிக்க கோரிக்கை விடுக்கத் தயார் என வழக்கறிஞர்கள் முன்னர் தெரிவித்திருந்தனர்.

இதன் பிரகாரம் குறித்த வழக்கை எதிர்வரும் செப்டம்பர் மாதம் 13ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ணா)

## இறுதியில் இந்தியாவை வீழ்த்தி சம்பியனானது பாகிஸ்தான்!

வளர்ந்து வரும் அணிகளுக்கு இடையிலான ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் பாகிஸ்தான் ஏ அணி வெற்றி பெற்றுள்ளது.

கொழும்பு ஆர் பிரேமதாச சர்வதேச விளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்ற இறுதிப் போட்டியில், இந்திய ஏ மற்றும் பாகிஸ்தான் ஏ அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய ஏ அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. முதலில் துடுப்பாடிய பாகிஸ்தான் ஏ அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 352 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

353 என்ற வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பாடிய இந்திய ஏ அணி 40 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 224 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 128 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

போட்டியில் 108 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்த பாகிஸ்தான் ஏ அணியின் தய்யாப் தாஹிர் ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ணா)

## நீர்கொழும்பு கடலில் மூழ்கி 3 தமிழ் இளைஞர்கள் மரணம்

நீர்கொழும்பு கடலில் நீராடிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உட்பட மூவர் நீரில் மூழ்கிச் சாவடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் – சுன்னாகத்தைச் சேர்ந்த ஜெயதீஸ் வரன் ஜெயலக்ஸ்மன் (வயது 23), கொஸ்லாந்தையைச் சேர்ந்த சத்தியமூர்த்தி சிறிவிந்த் (வயது 21), டயகமவைச் சேர்ந்த வடிவேல் ஆனந்தகுமார் (வயது 23) ஆகியோரை இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் கடலில் நீராடிய இவர்கள் மூவரும் காணாமல்போயினர். இவர்களுடன் நீராடச் சென்ற மற்றோர் இளைஞர் நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் அளித்த முறைப்பாட்டைத் தொடர்ந்து நடத்தப்பட்ட தேடுதலில் இறந்தவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டன.

## இலங்கையில் இந்தியா ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு – கிழக்கு மாகாணங்கள் இலங்கையில் இருந்து துண்டாடப்படும். சகிதற்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் இடமளிக்கக்கூடாது. அது தேசியப் பாதுகாப்புக்கு மிகவும் அச்சுறுத்தலானது, என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

## நிம்மதியைத் தேடும் தமிழர் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோருகின்றார்களா? என்பதை அறியத் துணிவு இருந்தால் சர்வஜன வாக்கெடுப்பு நடத்துங்கள், என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நாடாளுமன்றத்தில் சவால் விடுத்திருந்தார். இது தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

சமஷ்டிக் கோரிக்கையையும் தனி நாட்டுக் கோரிக்கையையும் விடுதலைப்புலிகளும் தமிழ் அரசியல்வாதிகளும்தான் கோரி வந்தனர். ஒரு பக்கத்தில் தமிழ் அரசியல்வாதிகள் சமஷ்டி வேண்டும் என்று கோர, மறுபக்கத்தில் விடுதலைப்புலிகள் தனி நாடு வேண்டும் என்று கோரினார்கள். இறுதியில் ஒன்றும் நடக்கவில்லை. இந்த ஒற்றையாட்சி நாட்டுக்குள்தான் மூவின மக்களும் இன்று வாழ்கின்றார்கள், என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

## கொழும்பு – யாழ் புகையிரத .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விழிப்புடன் செயல் படவேண்டும். வீதிச் சமிக்கைகளை மதித்து புகையிரதம் செல்லும்வரை சில நிமிடங்கள் தாமதித்துச் செல்வதன் மூலம் உயிர்சேதம், பொருட்சேதம் என்பவற்றைத் தவிர்த்துக்கொள்ளமுடியும்.

எனவே , அனைவரும் மிக அவதானத்துடன் செயல்படவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## ரணிலின் கருத்து மீண்டுமொரு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கறுப்பு ஜுலை சம்பவம் மீண்டும் நிகழக்கூடாது என்றால், அரசியல் உரிமை, அதிகாரப் பகிர்வு என்பன நிறைவான வகையில் அர்த்தமுள்ள முறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியது அவசியம்.

இலங்கையில் கறுப்பு ஜுலை இனக்கலவரம் இடம்பெற்று 40 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் மீண்டும் அவ்வாறான ஒரு சூழல் தோற்றம் பெறாமல் இருப்பதற்கு உறுதியான நிலைபேறான எந்த நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

இது தொடர்பாக தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின்ற போதும் நிலையான நல்லிணக்கத்தை ஸ்தாபிக்க நடைமுறைக்கு சாத்தியமான எதுவுமே நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இலங்கையில் 1983 ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிராக இன வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்ட பின்னர் இந்தியாவின் தலையீட்டுடன் 1987 ஆம் ஆண்டு 13 ஆவது அரசியலமைப்பு திருத்தம் ஊடாக மாகாண சபை முறைமை உருவாக்கப்பட்டது. தற்போதைய நிலையில் அது கூட முழுமையாக இல்லாதொழிக்கப்படுள்ளது.

13 ஆவது அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வை நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தும்போது அதற்கு நாடாளுமன்றம் அனுமதிக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார்.

அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்த வேண்டுமானால் அதனை நாடாளுமன்றம் அனுமதிக்க வேண்டும் என்று கூறுவது முறையற்றது.

அதிகாரப் பகிர்வுக்கு நாடாளுமன்றத்திலுள்ள பெரும்பான்மை இடமளிக்காது என்பதை அறிந்தே, நாடாளுமன்றம் அனுமதிக்க வேண்டும் என ஜனாதிபதி கூறுகின்றார்.

நாட்டில் 2022 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட மக்கள் போராட்டத்தின் விளைவாக தற்போதைய நாடாளுமன்றத்துக்கு மக்கள் ஆணை இல்லாமற் போய்விட்டது. அது போலியான பெரும்பான்மையையே கொண்டுள்ளது.

தற்போதைய ஜனாதிபதியும் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர் அல்ல. எனவே தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வை வழங்க நாடாளுமன்றம் அனுமதிக்க வேண்டும் என, மக்கள் ஆணை இல்லாதவர்கள் கூறுவது மீண்டும் கறுப்பு ஜுலையையே தோற்றுவிக்கும், எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# கறுப்பு யூலையை நினைவேந்திய பிரித்தானியா வாழ் தமிழர்கள்









ஜூலை 23, 1983 தொடக்கம் ஜூலை 29 வரை திட்டமிட்ட முறையில் சிங்கள இனவாதிகள் மற்றும் காடையர்களால் தமிழர்கள் 3000 பேர் வரை படுகொலை செய்யப்பட்டு, கொடுமைப்படுத்தப்பட்டு, சொத்துகளை அழித்துச் சிதைத்து ஒரு பெரும் தமிழின அழிப்பை நிகழ்த்திய கோரமான நிகழ்வு நடைபெற்று நேற்றோடு 40 ஆண்டுகள் கடந்தோடிவிட்டன.

இந்தக்கறுப்பு ஜூலை தமிழின அழிப்பினை நினைவுகூரும் நிகழ்வானது, நேற்று லண்டனில் பிரித்தானியா தமிழர் ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில், தமிழ் இளையோர் அமைப்பினால் முன்னெடுக்கப்பட்டது.

10 Downing வீதி முன்பாக நூற்றுக்கணக்கான மக்களுடன் கண்டனப் போராட்டமும் அங்கு நடைபெற்றது.

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

# சீனாவில் உடற்பயிற்சிக் கூட மேற்கூரை இடிந்து விழுந்து விபத்து - 11 பேர் மரணம்



வடகிழக்கு சீனாவில் கனமழையால் பாடசாலை ஒன்றின் உடற்பயிற்சி கூடத்தின் மேற்கூரை இடிந்து விழுந்ததில் குறைந்தபட்சம் 11 பேர் உயிரிழந்துள்ளதாக அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த விபத்தானது, நேற்று உள்ளூர் நேரப்படி பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றுள்ளது. உடற்பயிற்சிக் கூடம் இடிந்து விழுந்ததில் 19 பேர் உள்ளே சிக்கிக் கொண்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பலியானவர்களில் பலர் சிறுவர்கள் என நேரில் பார்த்தவர்கள் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தனர்.

குறித்த சம்பவத்தையடுத்து, ஹீலோங்ஜியாங் மாகாணத்தின் கிகிஹார் நகரில் உள்ள கட்டிடத்தின் பொறுப்பாளரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

விபத்தில் சிக்குண்ட நான்கு பேர் மட்டுமே உயிர் பிழைத்துள்ளதாக சீன அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கூரை மீது குவிக்கப்பட்டிருந்த எரிமலைக் கண்ணாடியின் ஒரு வடிவமான பெர்லைட், மழைநீரில் நனைந்ததால், கூரை சரிந்ததாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். (மி)

## மணிப்பூர் கலவரத்தை வேடிக்கை பார்க்கும் பிரதமரும் உள்துறை அமைச்சரும் பதவி விலக வேண்டும்! - திருமாவளவன் எம்.பி.



மணிப்பூர் வன்கொடுமைச் சம்பவம் இந்தியா முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ள நிலையில், இந்தச் சம்பவத்தைக் கண்டித்து பல்வேறு பகுதிகளில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில், மணிப்பூர் சம்பவத்தைக் கண்டித்து விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பிலும் மதுரை அண்ணா நகரில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் அக்கட்சியின் தலைவர் திருமாவளவன் எம்.பி. கலந்துகொண்டார்.

அப்போது அங்கு பேசிய அவர், மணிப்பூரின் மலைப்பகுதிகளில் உள்ள கனிம வளங்களை சுரண்டவே கலவரத்தை ஏற்படுத்தியுள்ளனர் என்றும், மணிப்பூரில் நடக்கும் கலவரத்தை வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கும் பிரதமர் மோடியும், உள்துறை மந்திரியும் பதவி விலக வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

## இந்தோனேசியாவில் படகு விபத்து - 15 பேர் உயிரிழப்பு



இந்தோனேசியாவின் சுலவேசி தீவில் படகு மூழ்கியதில் ஏறக்குறைய 15 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 19 பேர் காணாமல் போயுள்ளதாகவும் தேசிய தேடல் மற்றும் மீட்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

குறித்த விபத்து இன்று அதிகாலை வேளையில் இடம்பெற்றதாகவும் படகில் 40 பேர் பயணித்ததாகவும் விபத்துக்கான காரணம் இன்னமும் கண்டறியப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், ஆறு பேரை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாகவும் சர்வதேச செய்திகள் தெரிவிக்கப்படுகின்றது. (மி)

## டுவிட்டர் குருவியைக் கைவிட்டு புதிய வடிவுக்கு தாவும் எலான்!

உலகின் முதல்நிலைப் பணக்காரரான எலான் மஸ்க் கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் டுவிட்டர் நிறுவனத்தை வாங்கினார். அந்த நிறுவனத்தின் சிஇஓ வாக பொறுப்பேற்ற அவர், பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை எடுத்தார். குறிப்பாக ஊழியர்களின் எண்ணிக்கையை பாதியாகக் குறைத்தார். பயனாளர்கள் தங்கள் டுவிட்டர் கணக்குகளை அதிகாரப்பூர்வமானதாக மாற்றுவதற்குக் கட்டணம் உட்பட புதிய மாற்றங்களை கொண்டு வந்தார். வருமானத்தைப் பெருக்கும் நடவடிக்கையாக இந்த முடிவை எடுத்ததாக எலான் மஸ்க் விளக்கம் அளித்தார்.

இந்த நிலையில், அடுத்த அதிரடியாக டுவிட்டரின் நீல நிற குருவி லோகோவை மாற்ற இருப்பதாக நேற்று அவர் கூறியிருந்தார். இந்த அறிவிப்பை வெளியிட்ட சில மணி நேரங்களிலேயே புதிய லோகோ வெளியாகியுள்ளது. டுவிட்டரை ரீபிராண்ட் செய்யும் வகையில் எலான் மஸ்க் அதன் லோகோவை 'ஒ' என மாற்றுவதாக அறிவித்து இந்த லோகோவை வெளியிட்டுள்ளார். இதன் மூலம் டுவிட்டரின் தனித்துவமான லோகோவான நீல குருவிக்கு விடை கொடுக்கப்பட உள்ளது.

ட்விட்டரின் சிஇஓ லிண்டா யாசினோவும் லோகோ மாற்றத்தை உறுதிப்படுத்தியுள்ளார். ஒடியோ, வீடியோ, மெசேஜிங், பணம் செலுத்துதல் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் உள்ளடக்கியதாக டுவிட்டர் மாற்றப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஆப்கானிஸ்தானில் தொடர் மழை வெள்ளத்தில் சிக்கி 26 பேர் இறப்பு



ஆப்கானிஸ்தானின் மத்திய பிரதேசத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ச்சியான மழை பெய்துவருகின்றது. இந்தத் தொடர் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி 26 பேர் உயிரிழந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த வெள்ளத்தில் நாற்பதுக்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வெள்ளத்தில் சிக்குண்டோரை மீட்கும் பணிகளை அந்த நாட்டு அதிகாரிகள் முன்னெடுத்துள்ளனர். மேலும் வெள்ளப் பாதிப்பில் இருந்து பாதுகாப்பாக இருக்குமாறும் ஆப்கானிய மக்களை அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.



## வணிக செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்தியது சீனா

விண்வெளியில் செயற்கைக்கோள்களைச் செலுத்துவதில் அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகளின் வரிசையில் சீனாவும் முன்னிலை வகிக்கிறது.

ஜியுகுவான் செயற்கைக்கோள் ஏவுதளத்தில் இருந்து சீனா, வணிக ரீதியிலான 2 செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்தியுள்ளது. க்யான்குன்-1 மற்றும் ஸிங்ஷிடாய்-16 என்று பெயரிடப்பட்ட இந்த செயற்கைக்கோள்கள் செரெஸ்-1 வகை ரொக்கெட் மூலம் அனுப்பப்பட்டன.

சிறிய ரக செயற்கைக்கோள்களை அனுப்ப பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட இந்த ரொக்கெட்டின் ஆறாவது பயணம் இதுவாகும். இந்த செயற்கைக்கோள்கள் தற்போது சரியான சுற்றுவட்டப் பாதையில் நிலைநிறுத்தப்பட்டுள்ளதாக சீன விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

## கிரேக்கத் தீவில் பரவிய காட்டுத் தீ மக்கள் துரிதகதியில் வெளியேற்றம்

கிரேக்கத் தீவான கோர்புவில் கட்டுக்கடங்காமல் பரவிவரும் காட்டுத்தீயினால் மக்கள் அங்கிருந்து அவசரமாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.

காட்டுத் தீ தொடர்பான காட்சிகள் சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தக் காட்டுத் தீயை அடுத்து, கிரேக்கத்தின், சான்டா, மெகுலா, போர்டா, பாலியா, பெரித்தியா மற்றும் சினிஸ் ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் கடல் வழியாக வெளியேற்றப்பட்டுள்ளனர். இதுவரை 30,000 க்கும் மேற்பட்ட மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிரேக்கத் தீவின் மையத்தில் இருந்து தீப்பிழம்புகள் தொடர்ந்து பரவுவதால் பலர் தங்கள் விடுதிகளை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

காட்டுத்தீயை அடுத்து, கிரேக்கம் முழுவதும் வெப்பநிலை 40 பாகை செல்சியஸை விட அதிகமாக உள்ளதாகவும், சில பகுதிகளில் ஒரு வாரமாக தீ எரிந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தீயினால் நாட்டில் நிலவும் அசாதாரண நிலைமைகளைக் கருத்தில் கொண்டு நாட்டில் இன்று நடைமுறையாகத் திட்டமிடப்பட்டிருந்த தேசிய விடுமுறையொன்று ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக கிரேக்க ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (மி)

**இறந்த இராணுவ வீரர்களின் உடல்கள் ஆடி 24, 1983 அன்று மாலை 5 மணி வரை எதிர்பார்த்தபடி கொழும்புக்கு வரவில்லை. அரசு திட்டமிட்டு காலதாமதம் செய்தது என்று கூறினர். உடல்கள் வருவதில் தாமதம் ஏற்பட்டதால், திரண்டிருந்த மக்கள் எரிச்சல் அடைந்து தமிழர்களின் வீடுகள் மற்றும் உடைமைகளைத் தாக்கத் தொடங்கினர்.**



**கலாநிதி நாகலிங்கம் சிவயோகன் (அமெரிக்கா)**

# ஆடி இனவழிப்பில் அல்லல்பட்ட அனுபவம்!

1983 முதல் 2023 வரை: 1983 ஆடி மாதத்தில் இடம்பெற்ற கொடூரமான கலவரம் நடந்து 40 வருடங்கள் கடந்துள்ள போதிலும் இலங்கை அரசியல் வரலாற்றில் தமிழருக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு நீதி இன்றுவரை வழங்கப்படவில்லை.

இந்த முறை நான் இரண்டு தரம் உயிரிழப்பில் இருந்து தப்பித்தேன். எனது உண்மையான அனுபவத்தை நான் கூறும்போது, நான் எப்படி தப்பித்தேன் என்பதை நீங்கள் காண்பீர்கள். கலவரத்தின் ஐம்பதாவது ஆண்டு விழாவில் என் கதையைச் சொல்ல நான் உயிருடன் இருப்பேனா என்று எனக்குத் தெரியவில்லை. எனவே, நான் உயிருடன் இருக்கும்போது எனது கதையைப் பகிர்ந்து கொள்ள இதுவே சிறந்த தருணமாகும்.

இந்த கலவரம் பல அம்சங்களில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கிட்டத்தட்ட 5000 பேர் கொல்லப்பட்டனர், 8000 வீடுகள் எரிக்கப்பட்டு சூறையாடப்பட்டன, 5000 இற்கும் மேற்பட்ட கடைகள் சூறையாடப்பட்டு எரிக்கப்பட்டு சாம்பலாக்கப்பட்டன. அந்த நேரத்தில் இந்த கலவரத்தால் ஏற்பட்ட மொத்த இழப்பு அமெரிக்க டொலர்களில் 350 மில்லியனுக்கும் அதிகமாக இருப்பதாக யாரோ மதிப்பிட்டுள்ளனர். 1983 ஆம் ஆண்டு ஆடி மாதம் 23 ஆம் தேதி இரவு 11.30 மணியளவில் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் இராணுவ வாகனங்கள் மீது நடந்த தாக்குதலில் 13 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்ட கலவரம் ஆரம்பித்தது.

என் பக்கத்திலிருந்து கதையை ஆரம்பிக்கிறேன். கலவரத்திற்கு ஏறக்குறைய 7 அல்லது 8 மாதங்களுக்கு முன்பு நான் எனது சொந்த ஊரிலிருந்து முதல் முறையாக இலங்கையின் தலைநகரான கொழும்புக்குச் சென்றேன். உயர்நிலைப் பள்ளிப் பட்டதாரியான நான், கல்வியில் எனது அடுத்த கட்டத்தை தொடர கொழும்புக்குச் சென்றேன். பல்கலைக்கழக அமைப்பில் நுழைவதற்கு இரண்டு முயற்சிகளுக்குப் பிறகு, ஐஊஆயு (Institute of Cost and Management Accountant) படிப்பைத் தொடர முடிவு செய்தேன், இது இப்போது CIMA (Chartered Institute of Management and Accounting) என அறியப்படுகிறது. வகுப்புகள் முன்பு ஒஸ்மானியா கல்லூரியில் (இப்போது அது இல்லை) பம்பலப்பிட்டி, கொழும்பு 4 என்ற இடத்தில் நடந்தது.

நான் எனது மூத்த சகோதரர் சிவகுமார் மற்றும் அவரது மனைவி சேதுபதி ஆகியோருடன் தங்கியிருந்தேன். நாம் வத்தளை /ஹனுப்பிட்டியவில் தங்கியிருந்தோம். ஒரு சிறுவனாக, எனது சிறுவயதில் எடுத்த அனைத்து புகைப்படங்களையும், எனது பள்ளி தோழர்கள் மற்றும் பிற நண்பர்களின் முகவரி எழுதப்பட்டிருந்த குறிப்புப் புத்தகத்தையும் எடுத்துக்கொண்டேன். எனது புத்தகங்கள் மற்றும் ஆடைகளைத் தவிர இவை இரண்டும் எனது மிகவும் மதிப்புமிக்க பொருட்களாக அன்று இருந்தது. ஆடி 1983 அளவில், நான் முதல் பருவ தேர்வை முடித்து, இரண்டாவது பருவப் படிப்பைப் தொடங்கியிருந்தேன்.

ஆடி 24, 1983 அன்று, வழக்கம் போல், நான் ஒரு பேருந்தில் என் வகுப்பிற்குச் சென்றேன். கடைசி விரிவுரை முடிந்ததும், நான் வெளியே வந்து பேருந்து நிறுத்தத்திற்குச் சென்றபோது, அங்கு என் நண்பர்கள் மகேந்திரராஜாவும், கோபிநாத்தும் (இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார்) எனக்காகக் காத்திருந்தனர். நாங்கள், ஒருவரையொருவர் வாழ்த்திக்கொண்டோம், மகேந்திரராஜா முன்தினம் இரவு (ஆடி 23, 1983) யாழ்ப்பாணத்தில் நடந்த தாக்குதல் பற்றி எனக்கு தெரியுமா என்று கேட்டார். அந்த நாட்களில் இரவுகளில் வானொலி செய்திகளை மட்டுமே நம்பியிருப்பதால், யாழ்ப்பாணத்தின் எந்தச் செய்தியையும் நான் அறியவில்லை. மகேந்திரராஜாவும் கோபிநாத்தும் கொழும்பில் கலவரம் வெடிக்கலாம் என்பதால் நாம் அனைவரும் கூடிய விரைவில் வீடு திரும்ப வேண்டும் என்றார். எனவே நான், மீண்டும் வத்தளையில் உள்ள எனது வீட்டிற்கு பேருந்தில் சென்றேன்.

பேருந்து கொழும்பு கோட்டை நிலையப் பகுதி வழியாகச் சென்றபோது, மக்கள் மத்தியில் பீதியைக் காண முடிந்தது, சில கும்பல்கள் பேருந்தை நிறுத்த முயன்றனர், ஆனால் பேருந்து சாரதி சிறிய பாதைகள் வழியாகச் சென்றதால், பிற்பகல் 2.30 மணியளவில் நான் வீட்டை பாதுகாப்பாக அடைய முடிந்தது. எனது அண்ணி முந்தைய நாள் யாழ்ப்பாணத்தில் உள்ள எங்கள் கிராமத்திற்கு ஒரு திருமணத்தில் கலந்து கொள்



வதற்காக சென்றிருந்தார். எனது மூத்த சகோதரர் கொழும்பு வர்த்தக நிறுவனத்தில் (சி.சி.சி) வேலைக்குச் சென்றிருந்தார் என்பது எனக்கு நினைவிருக்கிறது.

நான் மதிய உணவை சாப்பிட்டுவிட்டு, ஒரு தச்சுக் கடைக்கு வெளியே வைக்கப்பட்டிருந்த மரக்குற்றிகளில் சென்று அமர்ந்தேன். சொல்லப்போனால் அந்த நாட்களில் நேரத்தை கடத்த எனக்கு மிகவும் பிடித்த இடம் அதுவாகும். கலவரம் பரவிய செய்தியைக் கேட்டதும், மாலை 4.30 மணிக்கும் அண்ணர் வழக்கம்போல் வீட்டிற்கு வராததால் பதற்றமடைந்தேன். நல்ல வேளையாக மாலை 5.30 மணிக்கு அவர் திரும்பினார். என் சகோதரனும் என் பாதுகாப்பு குறித்து கவலைப்பட்டதாக என்னிடம் கூறினார். சிலர் தனது பேருந்தையும் தாக்க முயன்றதாகவும், ஆனால் சாரதி பேருந்தை பாதுகாப்பாக கொண்டு வந்ததாகவும் அவர் கூறினார். அந்த நாட்களில் கைத்தெலைபேசிகள் அல்லது தொலைபேசிகள் கூட அன்றாட வாழ்க்கையில் பொதுவானவை அல்ல.

தேநீர் அருந்தும் போது வானொலியில் மாலை செய்திகளைக் கேட்டோம். ஆடி 23, 1983 இல், புலிகள் இராணுவ வாகனங்களைத் தாக்கினர். 13 இராணுவ வீரர்கள் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில், பலாலி இராணுவ முகாம் முகாமில் இருந்து உடனடியாக இராணுவத்தினர் சம்பவ இடத்திற்குச் சென்று அக்கம் பக்கத்தில் தங்கியிருந்த குடும்பங்களைச் சுட்டுக் கொன்றனர். 51 பேர் கொடூரமாக கொல்லப்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அவர்களில் பெரும்பாலோர் வயதானவர்கள் மற்றும் குழந்தைகள் - தங்கள் வீடுகளில் தூங்கிக் கொண்டிருந்தனர்.

மாலை 6.00 மணியளவில் இந்தச் செய்திகள் அனைத்தையும் நாங்கள் சேகரித்தபோது, எங்கள் வீட்டு உரிமையாளர் வந்து நாங்கள் தங்கியிருந்ததால் அவரது வீட்டைப் பற்றி கவலைப்படுவதாகக் கூறினார். அது எங்கள் மனதில் மேலும் கவலையை சேர்த்தது. மாலை 6.30 மணியளவில் யாரோ கதவைத் தட்டினார்கள். நான் சாரளம் வழியாக எட்டிப்பார்த்தேன், அவர் எங்கள் வீட்டிற்கு எதிரே உள்ள தச்சுவேலைக் கடையில் வேலை செய்பவர். அவர் பீதியடைந்திருந்ததை என்னால் பார்க்க முடிந்தது. கதவைத் திறந்தேன். கலவரக்காரர்கள் எங்கள் இடத்தை நோக்கி வருவதாகவும், எங்களையும் தன்னுடன் வரும்படியும் கூறினார். வீட்டில் இருந்து எதையும் எடுக்க முடியாமல் அவருடன் நாம் சென்றோம். கவலைப்பட வேண்டாம், தாங்கள் எங்களைப் பாதுகாப்போம் என்று கடையின் உரிமையாளர் கூறினார். நாங்கள் அவரது குடும்பத்தினருடன் அமர்ந்து பேசினோம்.

இரவு 8 மணியளவில் மக்கள் கூச்சல் போடுவதைக் கேட்டோம். வெளியே நின்று கொண்டிருந்த தொழிலாளி ஒருவர் விரைந்து வந்து, கலவரக்காரர்கள் எங்களைத் தேடி எங்கள் வீட்டுக்கு வெளியே கூச்சல் போடுகிறார்கள் என்றார். சிறிது நேரத்தில் தச்சரின் வீட்டின் அருகே கூச்சல் சத்தம் கேட்டது. உரிமையாளர் எங்களை அவரது கொல்லைப்புறத்திற்கு செல்லும்படி கூறினார். இருவரும் அவரது வீட்டு பின்புறம் விரைந்தோம். அந்த வீட்டைத் தேட முயன்ற கலகக்காரர்களின் குரலை எங்களால் கேட்க முடிந்தது. நாம் வீட்டின் சமையலறைக்குள் நுழைந்து புகைக்கூண்டுக்குள் ஏற ஆரம்பித்தோம். இலங்கையில், விறகிலிருந்து வெளியேறும் புகைக்காக, சமையலறையில் இருந்து தப்பிக்க உயரமான புகைபோக்கி ஒன்றை கட்டுகிறோம். சுற்றிலும் பல ஓட்டைகள் இருப்பதால் எளிதில் ஏறலாம். அது அன்று எங்களுக்கு உதவியது. உள்ளே ஏறி மௌனமாக ஓட்டைகள் வழியாக வெளியே நடப்பதைப் பார்த்தோம்.

எங்கள் வீடு கொள்ளையடிப்பதையும், வீட்டிற்கு தீ



வைப்பதையும் பார்க்க முடிந்தது. சிறுவர்கள் உட்பட தெரியாத பலர் எங்கள் வீட்டில் இருந்து பொருட்களை எடுத்துச் சென்றனர். எரிக்க வேண்டாம் என்று வீட்டு உரிமையாளர் அவர்களிடம் கெஞ்சுவதையும் பார்க்க முடிந்தது. இருப்பினும், கலவரக்காரர்கள் எங்கள் பொருட்களை மண்டபத்தின் நடுவில் வைத்து தீ வைத்து எரித்தனர். உடனடியாக, உரிமையாளர் மற்றும் சில அக்கம் பக்கத்தினர் தண்ணீரை ஊற்றி தீயை அணைத்தனர். இரவு 10.00 மணியளவில் அந்த இடம் மிகவும் அமைதியானது. கலவரக்காரர்கள் அந்த பகுதியை விட்டு வெளியேறினர்.

புகைபோக்கியிலிருந்து இறங்கி வரவேற்பறைக்கு வந்தோம். மரவேலைக் கடையின் உரிமையாளரும் அவரது தொழிலாளர்களும் அந்தப் பகுதியில் நடந்த செயற்பாடுகளைப் பற்றி தீவிரமாகப் பேசினர். நாங்கள் பாதுகாப்பாக இருக்கிறோம் என்று மகிழ்ச்சி அடைந்தனர். எங்கள் வீட்டில் இருந்து எதையாவது எடுத்து வர வேண்டுமா என்று கேட்டார். நாம் ஆம், என்று வீடு செல்ல ஆயத்தமானோம். ஆதாரம் இல்லாமல் சொத்துகளை கொள்ளையடித்து தமிழர்களை கொல்ல கலவரக்காரர்களுக்கு உதவியாக இருக்க மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் எங்களுக்கு மின்விளக்கு ஒன்றையும் கொடுத்தார்.

எனவே, நாங்கள் எங்கள் வீட்டிற்குச் சென்று ஏதாவது கிடைக்குமா என்று சோதித்தோம். எல்லாவற்றையும் தரையில் வீசியெறிந்து அப்பகுதி முழுவதும் குப்பையாக இருந்தது. உடைந்த சாரளங்களில் இருந்த கண்ணாடித் துண்டுகள் தரை முழுவதும் சிதறி இருந்தது. சமாளித்து நடந்து சில துணிகளை எடுத்தோம், அண்ணாவும் தான் வீட்டில் வைத்திருந்த முக்கியமான பொருட்களை தேடினார். அவரும் அங்கிருந்து எதையோ எடுத்தார். எனது புகைப்படங்கள் பல பாதி எரிந்திருப்பதைப் பார்க்க முடிந்தது. எனது தினக் குறிப்புகள் எரிக்கப்பட்டிருந்தன. பத்திரமாக இருந்த சில பொருட்களை ஒரு பையில் வைத்துக்கொண்டு நாம் தச்சரின் வீட்டிற்குத் திரும்பினோம்.

எங்களிடம் இரவு உணவு சாப்பிடச் சொன்னார். எங்களுக்கு சம்பலுடன் சில பாண் துண்டுகள் கொடுத்தனர் (சம்பல் என்பது தேங்காய் மற்றும் மிளகாயைச் சேர்த்து அரைத்து செய்யப்படுகிறது). எங்களையும் அங்கேயே படுக்கச் சொன்னார். போதிய இடம் இல்லாததால், நாங்கள் அமர்ந்திருந்த நாற்காலியில் படுத்து தூங்கினோம். என்னால் தூங்க முடியவில்லை. மறு நாள் (ஆடி 25, 1983) அதிகாலை 4 மணியளவில், சில கூச்சல் மற்றும் அழுகைச் சத்தம் கேட்டது.

உரிமையாளர் மற்றும் சில தொழிலாளர்கள் எழுந்து அனைவரும் பீதியடைந்தனர். கலவரக்காரர்கள் எங்களைத் தேடித் திரும்பினால் அடுத்து என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்தார்கள். இறுதியாக, அந்த இடத்திலிருந்து 2 அல்லது 3 மைல் தொலைவில் உள்ள அவர்களது கிராமத்திற்கு எங்களை அழைத்துச் செல்ல முடிவு செய்தனர். எனவே, அவர்கள் அனைவரும் எங்களைப் பாதுகாத்து அங்கு அழைத்துச் செல்ல ஆயத்தமானார்கள். 5 அல்லது 6 தொழிலாளர்கள் இருந்ததாக எனக்கு நினைவிருக்கிறது. அவர்களில் இருவர் கையில் வாள்களுடன் எங்களுக்கு முன்னால் நடந்தார்கள். மீதமுள்ளவர்கள் கைகளில் வாள்களுடன் பின்னால் வந்தனர். அவர்களே தமிழரைத் தேடும் கலவரக்காரர் போல நடந்து சென்றனர்.

ஏறக்குறைய 45 நிமிடங்கள் காடுகளின் வழியாக நடந்த பிறகு, தச்சுக் கடை உரிமையாளரின் மூதாதையர் வீட்டை அடைந்தோம். சூறையாடப்பட்ட எங்கள் வீட்டில் இருந்து சில பொருட்களை சேகரித்த பைகளை நாங்கள் தச்சர் வீட்டில் விட்டுவிட்டோம். நாங்கள் கிராமத்து வீட்டை அடைந்ததும், அவரது சகோதரியும் பெற்றோரும் எங்களை வரவேற்று, யாரும் அங்கு வரமாட்டார்கள், கவலைப்பட வேண்டாம் என்று ஆறுதல் சொன்னார்கள். அவர்கள் எங்களுக்கு ஒரு நல்ல காலை உணவை வழங்கினர். நாங்கள் ஓய்வெடுத்தோம், உணவு மிகவும் சுவையாக இருந்தது. அதன் பிறகு அவர்கள் அனைவரும் எங்களைச் சுற்றி அமர்ந்து கதைத்தார்கள். சரியாகத் தூக்கம் வராததால், நாங்கள் அமர்ந்திருந்த நாற்காலியில் மீண்டும் தூங்கினோம்.

மாலை 3 மணியளவில், சகோதரி எங்களிடம் விரைந்து வந்து கலவரக்காரர்கள் எங்களைத் தேடி வருவதாகக் கூறினார். நாங்கள் அவர்களின் வீட்டின் பின்னால் சென்று தப்பி ஓட முயன்றோம். ஏறக்குறைய 25 மீட்டர் சென்றபோது, ஒரு ஏரியைக் கண்டோம், எங்கு ஓடுவது என்று தெரியவில்லை. ஏரிக்குள் சென்று மறுபுறம் வழி இருக்கிறதா என்று பார்க்க முடிவு செய்தோம். நடக்க ஆரம்பித்ததும் தண்ணீரின் ஆழம் அதிகரித்தது. ஒரு கட்டத்தில் இன்னும் ஆழமாகச் செல்வது பாதுகாப்பானது அல்ல என்று நினைத்தோம். அங்கே தண்ணீருக்கு நடுவில் சில மரங்களைக் கண்டோம். மரத்தில் ஏற முடிவு செய்தோம். மரத்தின் கிளைகளில் ஏறி நின்று பார்த்தோம். நாம் மதிய உணவு எதுவும் உண்ணாததால் நாங்கள் மிகவும் சோர்வாகவும் பசியாகவும் இருந்தோம்.

இருட்டாக வர, இரவில் தண்ணீருக்குள் இருப்பது பாதுகாப்பானது அல்ல என்று நினைத்தோம். நாங்கள் வெளியே சென்று நிலைமையை எதிர்கொள்வோம் என்று நினைத்தோம். நாங்கள் கீழே இறங்க முயன்றபோது, தண்ணீரில் சில தெறிக்கும் சத்தம் கேட்டது. இரண்டு பெரிய முதலைகள் மெதுவாக வந்து மரத்தைச் சுற்றி நகர்ந்தன. இப்போது மரத்திலிருந்து இறங்கவே பயந்தோம். மரத்தைச் சுற்றி சில சுற்றுகள் சுற்றிய பிறகு, முதலைகள் அங்கிருந்து நகர்ந்தன. இருட்டி விட்டதால், இறங்கி கரைக்கு செல்லலாம் என நினைத்தோம். முதலைகளைத் துரத்த மரத்தின் இரண்டு பெரிய கிளைகளை முறித்து எடுத்துக்கொண்டு, மெதுவாக மரத்திலிருந்து இறங்கி கரையை நோக்கி நடக்க ஆரம்பித்தோம். நல்லவேளையாக முதலைகள் மீண்டும் வரவில்லை.

நாங்கள் கரையை அடைந்ததும், சிலர் எங்களுக்காக காத்திருந்தனர். சகோதரி எங்களை நோக்கி விரைந்து வந்து, முதலைகளுக்குப் பயந்து அவர்கள் ஏரிக்குள் செல்லவதே இல்லை என்பதால் எங்கள் பாதுகாப்பு குறித்து கவலைப்படுவதாகக் கூறினார். முதலைகளிடம் இருந்து நாங்கள் தப்பியது நல்ல நேரம் என்று அங்கு கூடியிருந்தவர்கள் தெரிவித்தனர். 24 மணி நேரத்தில் மனிதக் கொலையாளிகள் மற்றும் முதலைகளிடமிருந்து இரண்டு முறை தப்பிப்பது எவ்வளவு நல்ல விடயம் என்று நாங்கள் நினைத்தோம்.

காலையில் இருந்து எதுவும் சாப்பிடாததால், குடும்பத்தினர் உணவு கொடுத்தனர். பிறகு, சில நேரங்களில் மீண்டும் சத்தம் கேட்டது. அப்போது, தச்சுக் கடையைச் சேர்ந்த ஒரு தொழிலாளி எங்களிடம் விரைந்து வந்து, தமிழ் மக்களை அகதிகள் முகாம்களுக்கு காவல்துறை அழைத்துச் செல்கிறது, அதுதான் இப்போது பாதுகாப்பான வழி என்று கூறினார். அவர்களுடன் செல்ல முடிவு செய்தோம். எங்களுக்கு உணவு கொடுத்த சகோதரிக்கு எனது மூத்த சகோதரர் தனது கைக்கடிகாரத்தை வழங்கினார், மேலும் எங்களை கவனித்துக்கொண்ட குடும்பத்திற்கு நன்றி கூறினார். பின்னர், தமிழ் மக்களை அகதிகள் முகாமுக்கு அழைத்துச் செல்லும் பொலிஸ் வாகனம் நிறுத்தப்பட்டிருந்த எங்கள் வீட்டுக்கு அருகாமையில் எங்களை மீண்டும் அழைத்துச் சென்றனர்.

நாங்கள் காவல்துறை பேருந்துக்குள் நுழைய முயன்றபோது, கலவரக்காரர்கள் மீண்டும் எங்களை தாக்க முயன்றனர். ஆனால் அவர்களை தாக்க காவல்துறையினர் அனுமதிக்கவில்லை. ஆனால், அவர்கள் தொடர்ந்து காவல்துறை பேருந்தின் மீது கற்களை வீசி தாக்கினர். இறுதியாக, இரவு 9 மணியளவில் அந்த இடத்திலிருந்து பேருந்து புறப்பட்டு, அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட தற்காலிக அகதிகள் முகாம்களில் ஒன்றான மகாநாமா கல்லூரிக்கு எங்களை அழைத்துச் சென்றது. அங்கு வருவதற்கு முன், பேருந்து பல்வேறு இடங்களுக்குச் சென்று மற்ற அகதிகளையும் அழைத்துச் சென்றது.

பேருந்து சாரளம் வழியாக கலவரக்காரர்கள் செய்த சேதத்தை என்னால் மதிப்பிட முடிந்தது. பல இடங்களில் தமிழ் மக்கள் தாக்கப்பட்டதை நான் பார்த்தேன். வீடுகள், கடைகள் எரிவதைக் காண முடிந்தது. நாங்கள் முகாமுக்குள் நுழைந்தவுடன், எங்கள் பெயர்கள் பதிவு செய்யப்பட்டன, நாங்கள் தங்குவதற்கு ஒரு வகுப்பறை வழங்கப்பட்டது. எங்களுக்கு ஒதுக்கப்பட்ட வகுப்பறைக்குச் சென்றோம். தண்ணீர், கழிப்பறை வசதிகள் எதுவும் இல்லை. பள்ளியில் இருக்கும் குறைந்த வசதிகளையே பயன்படுத்த வேண்டியிருந்தது. தெரிந்த சிலரை அங்கே பார்க்க முடிந்தது.

மீண்டும் பசி எடுக்க ஆரம்பித்தது. உணவு எதுவும் கிடைக்கவில்லை. சில சிங்களவர்கள் வேலி ஊடாக உணவு விற்பனை செய்வதாக ஒருவர் எங்களிடம் கூறினார். ஆனால், எங்களிடம் உணவு வாங்கக் கூட கையில் போதிய பணம் இல்லை. நல்லவேளையாக, எங்கள் மாமாக்களில் ஒருவர் (மறைந்த திரு. கோவிந்தப்பிள்ளை), அவர் தனது மனைவி மற்றும் நான்கு குழந்தைகளுடன் (பாமா, கமலினி, அருந்ததி மற்றும் முகுந்தன்) தங்களுக்கென கொஞ்சம் உணவை வாங்கி எங்களுடன் பகிர்ந்து கொண்டார்.

அந்த மாமா மிக நெருங்கிய உறவினர் என்றாலும் அவர்கள் கொழும்பில் தங்கியிருந்ததால் அவர்களை நான் சந்திக்கவில்லை. அதனால், எனக்கும் அவரின் குழந்தைகளை தெரியாது. இருப்பினும், நாங்கள் விரைவில் மிகவும் நட்பாகினோம். இவர்களைத் தவிர எனது பள்ளித் தோழிகளில் ஒருவரான செல்வி பவானி (தும்பளை) மற்றும் வல்வெட்டித்துறையில் உள்ள பிரபாகரனின் வீட்டுக்குப் பக்கத்தில் இருந்த ஒரு பெண் (இப்போது பெயர் மறந்துவிட்டது). நாங்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் நெருக்கமாகிவிட்டோம், நாங்கள் வேறு எதுவும் செய்யாததால் இரவுகள் உட்பட எல்லா நேரங்களிலும் அரட்டையடித்தோம். அந்த முகாமில் 2000க்கும் மேற்பட்ட தமிழர்கள் இருந்தனர்.

1983 ஜூலை 24 அன்று என்ன நடந்தது என்பது பற்றிய அனைத்து தகவல்களையும் மற்றவர்களிடம் கேட்டறிந்து சேகரிக்க முடிந்தது. இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, யாழ்ப்பாணத்தில் அவர்களை அடக்கம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால், யாழ்ப்பாண இராணுவத் தளபதி அவர்களது உடல்களைக் கொழும்புக்கு அனுப்ப விரும்பினார். எனவே, கொல்லப்பட்ட இராணுவ வீரர்களின் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் தகனம் செய்வதற்கு உடல்கள் வரும் வரை காத்திருந்தனர்.

இறந்த இராணுவ வீரர்களின் உடல்கள் ஆடி 24, 1983 அன்று மாலை 5 மணி வரை எதிர்பார்த்தபடி கொழும்புக்கு வரவில்லை. அரசு திட்டமிட்டு காலதாமதம் செய்தது என்று கூறினர். உடல்கள் வருவதில் தாமதம்

ஏற்பட்டதால், திரண்டிருந்த மக்கள் எரிச்சல் அடைந்து தமிழர்களின் வீடுகள் மற்றும் உடைமைகளைத் தாக்கத் தொடங்கினர். கொல்லப்பட்ட இராணுவ வீரர்களின் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் மத்தியில் பதற்றம் ஏற்பட்டது. இரவு 8.30 மணியளவில் உடல்கள் வந்தடைந்தன.

இறுதிச் சடங்கில் ஜனாதிபதி மற்றும் அமைச்சரவை அமைச்சர்கள் கலந்துகொண்டனர். சில அமைச்சர்கள் மிகவும் உணர்ச்சிகரமாகப் பேசி அங்கிருந்த மக்கள் மத்தியில் இனவாதத்தை தூண்டியதாக கேள்விப்பட்டோம். தமிழ் மக்களுக்கு பாடம் புகட்டுங்கள், என்று மறைமுகமாக கேட்டுக் கொண்டனர். தகனம் முடிந்ததும், மயானத்தில் இருந்து கூட்டம் கொழும்பின் தெருக்களில் நகர்ந்து, தமிழர்களை கண்டதும் கொன்றது. எந்த திட்டமும் இல்லாமல் நடந்ததாக தெரிந்தாலும், அது உண்மையல்ல.

கலவரக்காரர்களின் கைகளில் தமிழர்கள் வசிக்கும் இடங்களின் வாக்காளர் பட்டியல் இருந்தது, தமிழ் வணிக நிறுவனங்களின் முகவரி மற்றும் தொழிற்சாலைகள் விபரங்கள் இருந்தன. தமிழ் கைதிகள் மற்றும் குடிசைப் பகுதிகளில் வாழும் தமிழர்களின் பெயர்ப் பட்டியல் கூட அவர்களிடம் இருந்தது. எங்கள் வீட்டிலிருந்து நாங்கள் சென்ற கிராமம் வரை கலவரக்காரர்கள் எங்களைத் துரத்திய விதத்தில் இருந்து இது தெளிவாகத் தெரிகிறது. குறிப்பிட்ட தமிழரைக் கொலை செய்துவிட்டோம் என்ற தகவலை யாருக்கோ அனுப்ப வேண்டும் போல துரத்தினர்.

மறுபுறம், கொழும்பு, பம்பலப்பிட்டி பிரதேசத்தில், கதிரேசன் கோவிலில் ஆடி வேல் விழா (முருகனின் ஆயுதத்தை (வேல்) கதிர்காமத்தில் உள்ள மற்றொரு புகழ்பெற்ற முருகன் கோவிலுக்கு எடுத்துச் செல்லும் திருவிழா. ஆனால், சில காரணங்களால் அந்த வழக்கம் நின்று விட்டது. பம்பலப்பிட்டி கதிரேசன் கோவிலுக்கு கொண்டு வரப்பட்ட வேல் மீண்டும் புதிய கதிரேசன் கோவிலுக்கு கொண்டு செல்லப்பட்டது. கலவரக்காரர்களிடம் திருவிழா பற்றிய விவரமும் இருந்தது. அவர்கள் சென்று பக்தர்களைத் தாக்கினர், அனைவரும் ஓடிவிட்டனர் அல்லது கொல்லப்பட்டனர். விழா நடு ரோட்டில் கைவிடப்பட்டது. இருப்பினும், வேல் மீண்டும் ஒரு வாகனத்தில் கொண்டு செல்லப்பட்டது. கோயில் தேர் இன்னொரு நாள் மீண்டும் கொண்டு செல்லப்பட்டது. நல்லவேளையாக, இந்த கோயில்கள் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த செட்டி சமூகத்தைச் சேர்ந்தவை என்பதால் தப்பின. மற்றவர்கள் பேசுவதில் இருந்து நான் நாள் முழுவதும் சேகரிக்க முடிந்த செய்திகள் இவை.

அடுத்த நாள், ஆடி 26, 1983 அன்று காலையில், கலவரம் பற்றிய மோசமான செய்திகளைக் கேட்டோம். இந்த முறை மகாராஜா அல்லது ஞானம் போன்ற பெரும் பணக்காரர்களால் கூட (அவர்கள் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் மற்றும் நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகளைக் கொண்ட பெரிய வணிக நிறுவனங்கள்) தப்பிக்க முடியவில்லை. அவர்களது வணிக நிறுவனங்கள் எரிந்து சாம்பலாயின. இது தவிர 1983 ஆடி 25 மாலை, கொழும்புச் சிறையில் 37 தமிழ்க் கைதிகள் கொல்லப்பட்ட கதைகளை கேட்டோம். சிறைக்குள் கைதிகள் எவ்வளவு கொடூரமாக கொல்லப்பட்டார்கள் என்ற கதைகளும் வந்தன. இந்தக் கொடூர தாக்குதலில் அரசியல் கைதிகள் மிகவும் பாதிக்கப்பட்டனர்.

நடந்த கொடுமைகள் அனைத்தும் மறுநாள் காலை செய்தித்தாள்களில் வந்தன. கொல்லப்பட்ட 37 கைதிகளில் ஒருவரான "சரக்கன்" என்று அழைக்கப்பட்ட அருந்தவராஜா எனது கிராமமான தும்பளையைச் சேர்ந்தவர். நான் அவரை சிறுவயதிலிருந்தே அறிவேன். அவர் என்னை விட வயதில் மூத்தவர். அவர் வேறு சில ரெலோ உறுப்பினர்களுடன் சேர்ந்து கொள்ளையடித்ததற்காக கைது செய்யப்பட்டு சிறைக்குள் துரதிர்ஷ்டவசமாக கொல்லப்பட்டார் என்பதை நான் அறிந்தேன். குட்டிமணி, தங்கதுரை, ஜெகன் ஆகிய மூன்று அரசியல் கைதிகள் சிறைக்குள் கடும் சித்திரவதைக்கு ஆளானார்கள். அவர்களின் கண்கள் அகற்றப்பட்டன, உடல்கள் சிதைக்கப்பட்டன. உள்ளே 12 வயதுச் சிறுவனும் இரக்கமின்றி கொல்லப்பட்டான் என அறிந்தேன்.

இந்தச் சம்பவங்கள் அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தின, மக்கள் தங்கள் எதிர்காலத்தைப் பற்றி கவலைப்படத் தொடங்கினர். எங்களுடைய ஹாட்லி கல்லூரியின் வகுப்புத் தோழரான ராஜன்கரவேல் எரியும் நெருப்பில் உயிரோடு வீசப்பட்டதையும் ஒருவரிடம் இருந்து கேள்விப்பட்டேன். யாரோ ஒரு கட்டிடத்தில் இருந்து அதைப் பார்த்து, கலவரக்காரர்களிடமிருந்து தப்பிக்க அவர் எவ்வளவு கெஞ்சினார் என்பதை விவரித்தார். நான்கு கலவரக்காரர்கள் அவரது இரு கால்களையும் கைகளையும் பிடித்து நெருப்பில் வீசினர். அவர் எங்கள் பள்ளியில் பிரபலமான கிரிக்கெட் வீரராகவும், மிகவும் மென்மையாகப் பேசக்கூடியவராகவும் இருந்தார்.

நான் எனது கலாநிதிப் படிப்பை முடித்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்த பிறகு 2000 ஆம் ஆண்டு இங்கிலாந்தைச் சேர்ந்த நண்பர் மகேந்திரனும் நானும் அவருடைய வீட்டைப் பார்க்கச் சென்றோம். அது முற்றிலும் சேதமடைந்து கைவிடப்பட்ட நிலையில் இருந்தது. சுவர் மூலம் ஏறி குதித்து உள்ளே சென்றோம். கொல்லைப்புறத்தில் எங்கள் நண்பரின் புகைப்படமும் அவரது மரணம் குறித்த கவிதையும் கிடைத்தன. அவை கண்ணாடிச் சட்டத்தினுள் இருந்தன. ஆனால், முற்றிலும் சிதைந்து இருந்தன. புகைப்படம் மற்றும் கவிதை ஆகியவற்றை மட்டும் எடுத்துக்கொண்டோம். அந்த கவிதையை 2013 இல் எப்போதோ எனது முகநூலில் பதிவிட்டிருந்தேன். கொழும்பில் தங்கியிருந்த தெரிந்தவர்கள் மத்தியில் இது மிகவும் சோகமான சம்பவம்.

ஆடி 25, 1983 இல் சிறையில் கைதிகள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, அரசாங்கம் சற்று முயன்று கலவரக்காரர்களைக் கட்டுப்படுத்த முனைந்தது. அரசாங்கம் இரவுகளில் ஊரடங்குச் சட்டத்தை விதித்தது. எனினும், மீண்டும் புலிகள் கொழும்புக்கு வந்து தாக்குவதாக வதந்திகள் பரவின. புலிகள் யாழ்ப்பாணம் முதலிய பகுதிகளைக் கைப்பற்றினர் என்றும் வதந்தி பரவியது. எனினும், இது மக்களின் உள் விருப்பத்தைக் காட்டியது. வெளியே என்ன நடக்கிறது என்று தெரியாமல் நிராயுதபாணியாக இருந்த அரசியல் கைதிகளை சிறைக்குள் கொன்றுவிட்ட கலவரக்காரர்கள் கொழும்புக்கு வந்து புலிகள் வந்து தாக்க வேண்டும் என்று மக்கள் விரும்பினர். புலிகளுடன் சேர்ந்து சிங்களக் கலவரக்காரர்களைப் பழிவாங்குவதுதான் எமக்கான ஒரே வழி என்று பலர் பகிரங்கமாகச் சொன்னார்கள்.

ஆடி 27, 1983 அன்று, யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற புகையிரத வண்டி கோட்டை ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டது. கலவரக்காரர்கள் அனைத்துத் தமிழ்ப் பயணிகளையும் கொன்றனர். பலரை உயிருடன் தண்டவாளத்தில் வைத்து எரித்ததை, கண்டு வந்தவர்கள் கூறினர். பல வதந்திகளும் பரவின. காரைநகரில் கடற்படைத் தளம் அழிக்கப்பட்டதாகக் கேள்விப்பட்டோம். நாக விகாரை இடிக்கப்பட்டது என்றும் வதந்தி பரவியது. ஆனால், எதுவும் நடக்கவில்லை. யாழ்ப்பாணச் சிறையில் சில கலவரங்கள் ஏற்பட்டு சில கைதிகளும் கொல்லப்பட்டனர்.



ஆடி 28, 1983 இல், இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி, ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிடம் தனது கவலையைத் தெரிவித்ததோடு, கலவரத்தைத் தடுக்க உடனடியாக தனது மந்திரி பி.வி. நரசிம்ம ராவ் அவர்களை இலங்கைக்கு அனுப்பினார். எங்கள் முகாமில் உள்ளவர்கள் இந்த செய்தியை செய்தித்தாள்களில் படித்து மகிழ்ச்சியாக இருந்தனர்.

ஆடி 29 மற்றும் 30 ஆகிய தேதிகளில் பல்வேறு இடங்களில் தமிழர்கள் கொல்லப்பட்ட செய்திகளையும் கேள்விப்பட்டோம். நாட்டின் கிழக்குப் பகுதியிலும் கலவரம் பரவியது. அதே நேரத்தில், எங்கள் முகாமில் சில வசதிகளும் கொஞ்சம் கொஞ்சமாக மேம்பட்டன. நகரங்களின் பல்வேறு பகுதிகளில் இருந்து அதிகமான மக்கள் முகாமிற்கு அழைத்து வரப்பட்டனர். தமிழர்கள் மீதான சித்திரவதை, கற்பழிப்பு மற்றும் கொலைகள் மற்றும் தமிழர்களின் வீடு எரிப்பு போன்ற கொடூரமான கதைகளை அவர்கள் சொன்னார்கள்.

முகாமுக்குள் சில நல்ல விஷயங்கள் மற்றும் கெட்ட விஷயங்கள் நடந்தன. எங்கள் நண்பர் ரவி முகாமிற்குள் தனது வாழ்க்கைத் துணையைக் கண்டுபிடித்தார். பின்னர் திருமணம் செய்துகொண்டு தற்போது கனடாவில் வசிக்கிறார். தெரிந்த ஒருவரின் (எனது கிராமத்தைச் சேர்ந்த வங்கியாளர் துரைராஜா) இரண்டு மகன்கள் முகாமை விட்டு வெளியேறினர். அவர்களில் ஒருவர் வெளியில் வைத்து கலவரக்காரர்களால் கொல்லப்பட்டார். எனது நண்பர் மகேந்திரராஜாவும் இன்னொரு நண்பரின் சகோதரருடன் வெளியே சென்றிருந்தார். அதிர்ஷ்டவசமாக, அவர் பத்திரமாகத் திரும்பி வந்து தற்போது இலங்கையில் இருக்கிறார். வெளியில் குளித்துவிட்டுத் திரும்ப என்னையும் உடன் வரச் சொல்லி அழைத்தனர். ஆனால் என் மூத்த சகோதரர் என்னை வெளியே செல்ல அனுமதிக்கவில்லை. இருப்பினும், எனது மூத்த சகோதரர் ஒருமுறை அவரது நண்பர்கள் சிலருடன் எங்கள் வீட்டிற்குச் சென்றார். பத்திரமாக திரும்பி வந்து எனக்காக சில துணிகளை கொண்டு வந்தார்.

எங்கள் மாமா கோவிந்தப்பிள்ளையும் தனது அலுவலக சகாக்களுடன் அவரது வீட்டைப் பார்க்கச் சென்றார். அவர் தனது வீடு முற்றிலும் சேதமடைந்து எரிந்திருப்பதைக் கண்டார். அவர் திரும்பி வந்து அதைப் பற்றி பேசினார். கதவுகள் எரிக்கப்பட்டு இருந்ததால் அதற்கு பலகை வைத்து ஆணி அடித்துவிட்டு வந்ததாக கூறினார். நாங்கள் அனைவரும் சோகமாக இருந்தோம். சில நாட்களாக அவர் மன உளைச்சலில் இருந்ததாக நினைவு. உள்ளுக்குள் மௌனமாக அழுதும் இருக்கலாம். அப்போது, வீட்டை எரித்த வேதனையை என்னால் உணர முடியவில்லை. ஆனால், இப்போது அதை நினைத்துப் பார்க்கவே பயமாக இருக்கிறது. ஒரு அரசு ஊழியரின் வாழ்நாள் சம்பாத்தியம் வீடு. அதுவும் என் மாமாவின் நான்கு குழந்தைகளும் 16 வயதுக்குட்பட்டவர்களாக இருந்தபோது எரிந்து சாம்பலானது தாங்க முடியாதது.

எங்களுடன் சில தமிழ் அரசியல்வாதிகளும் தங்கியிருந்தனர். அவர்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர் ஒருவரும் இருந்தார். அவர்களால் விரைவில் நல்ல வசதிகள் கிடைத்தன. ஒரு நாள், அந்த ஐ.தே.க. அமைப்பாளர் ஒரு படம் போடும் உபகரணம் கொண்டு வந்து திரையில் எம். ஜி. ஆரின் படத்தைப் போட்டார். அந்த யோசனை எங்களுக்குப் பிடிக்கவில்லை. மக்கள் கொல்லப்படும்போது, நாங்கள் படத்தைப் பார்த்து மகிழ விரும்பவில்லை. எனவே, நாங்கள் திரையில் கற்களை வீசினோம், அவர்கள் படத்தைக் கைவிட்டனர். ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர்கள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பிரபலமடைய விரும்புகின்றனர் எனப் புரிந்தது. அதனால், மற்ற முகாம்களை விட பல வசதிகளை சிறப்பாக செய்து கொடுத்தார்கள்.

கிட்டத்தட்ட ஒரு மாதம் அந்த முகாமில் இருந்தோம். முகாம் வாழ்க்கை எங்களுக்கு வாழ ஒரு வழியைக் கொடுத்தது. நாங்கள் அதை நன்றாக ஏற்றுக்கொண்டோம். பல புதிய நண்பர்கள் மற்றும் அதிக வேலை இல்லாமல் நாள் முழுவதும் பேசக்கூடிய சந்தர்ப்பம் மகிழ்ச்சியைக் கொடுத்தது. இரவுகளை ஒன்றாகக் கழிப்பது சில நினைவுகளைச் சேர்த்தது. இந்த ஒரு மாத காலம் எங்கள் குடும்பத்தினருடன் தொடர்பு கொள்ள முடியவில்லை. எங்கள் குடும்ப உறுப்பினர்கள் எங்கள் பாதுகாப்பு குறித்து கவலைப்பட்டனர்.

இறுதியாக யாழ்ப்பாணத்திற்கான ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டது. சில முகாம்களில் இருந்து இந்திய கப்பல்கள் மூலம் மக்கள் யாழ்ப்பாணத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். 1983 ஆம் ஆண்டு ஆடி 29 அல்லது 30 ஆம் திகதி எனக்கு சரியாக ஞாபகம் இருந்தால், "சிதம்பரம்" என்ற முதல் கப்பல் யாழ்ப்பாணத்திற்கு அகதிகளை அழைத்துச் சென்றது. ஆனால், முகாமில் கடைசி வரை இருந்த நாங்கள் இறுதியாக புகையிரத வண்டி மூலம் யாழ்ப்பாணம் சென்றோம். இப்போது எனக்கு ஏற்பட்ட அனுபவத்தையும் எழுதினேன். ஒவ்வொரு நொடியும் கச்சிதமாகப் பதிவு செய்து வைத்திருந்தேன். ஆனால், அது அதன் மதிப்பு தெரியாமல் தூக்கி எறியப்பட்டு விட்டது. கலாநிதிப் பட்டப்படிப்பை முடித்துவிட்டு திரும்பியபோது அதைக் காணவில்லை.

எனது சிங்கள நண்பர்கள் உட்பட பலர் இந்த தாக்குதலுக்கு 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுதான் கலவரத்தை தூண்டியது என்று குற்றம் சாட்டினர். ஆனால், இது உண்மை அல்லது சரியான முடிவு அல்ல. இதற்கு முன்னரும் கலவரங்கள் நடந்தன. உதாரணமாக, ஆனி 5, 1956 இல் இங்கினியாக்கலை படுகொலை, 1958 கலவரம், 1974 தை 10 தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை, 1977 கலவரம், 1981 கலவரம். யாழ்ப்பாண நூலகத்தை எரித்தது ஆனி 1, 1981 ஆகியவை. அப்போதெல்லாம் இராணுவத்தினரோ அல்லது சிங்கள மக்களோ கொல்லப்படவில்லை. புலிகள் இயக்கங்கள்கூட தோன்றவில்லை. தமிழர்களின் சொத்துக்களை கொள்ளையடிப்பதும், அவர்களை அடிமைகளாக இருக்குமாறு மிரட்டுவதும் மட்டுமே உள் நோக்கம்.

மேலும், 1982 ஆம் ஆண்டு 90 வீத தமிழ் வாக்குகளைப் பெற்று இலங்கையின் ஜனாதிபதியாக பதவியேற்ற ஜே.ஆர்.ஜெயவர்தன, 1983 ஆம் ஆண்டு ஆடி தெ்டக்கத்தில், (டெய்லி டெலிகிராப்-லண்டன், ஆடி 11, 1983) ஒரு பிரித்தானிய நிருபருக்கு பேட்டியளித்தபோது, கலவரத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்னர், "இப்போது யாழ்ப்பாண மக்களைப் பற்றி நான் கவலைப்படவில்லை. அவர்களின் வாழ்க்கையைப் பற்றியோ அல்லது எங்களைப் பற்றிய அவர்களின் கருத்துகளைப் பற்றியோ எனக்கு கவலையில்லை. நீங்கள் வடக்கில் எந்தளவுக்கு அழுத்தம் கொடுக்கிறீர்களோ, அந்தளவிற்கு சிங்கள மக்கள் இங்கு மகிழ்ச்சியாக இருப்பார்கள்" என்றார். இந்த நேர்காணல் ஆடி 17, 1983 அன்று அரச பத்திரிகையான, சண்டே ஒப்சர்வர் இதழில் மீண்டும் வெளியிடப்பட்டது. இந்தக் கூற்று சிங்கள மக்களைத் தூண்டிவிட்டதாகவும், இந்தக் கலவரத்திற்கான முன் ஏற்பாடுகள் நடந்து வந்ததை இது காட்டுவதாகவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

1983 க்குப் பிறகு கொழும்பில் அல்லது மேற்கில் உள்ள பெரிய நகரங்களில் கலவரம் நடந்ததில்லை என்பதை ஒருவர் கவனிக்கலாம். ஆயுதம் ஏந்தி அவர் களைத் திருப்பித் தாக்கும் திறன் தமிழர்களுக்கு இருக்கிறது என்ற அச்சம் அவர்களை மேலும் கொள்ளையடிப்பதைத் தடுத்து நிறுத்தியுள்ளது என்பதை இது குறிக்கிறது.

எவ்வாறாயினும், 1983 கலவரங்கள் மற்றும் அதைத் தொடர்ந்து நடந்த போருக்குப் பிறகு, தமிழர் பகுதிகளில் இராணுவத்தினர் அல்லது சிங்கள ஊர்க்காவல் படையினரால் கிட்டத்தட்ட 100 இற்கு மேற்பட்ட (தேதிகளுடன் பட்டியலிடலாம்) படுகொலைகள் நடந்துள்ளன. 1983 கலவரங்கள் ஏறக்குறைய 35 ஆண்டுகால யுத்தத்தையும் அதன் மூலம் மற்றும் பொருளாதார இழப்பை ஏற்படுத்தியது. இனக்கலவரம் காரணமாக பொருளாதாரம் கடுமையான நெருக்கடிக்குள் தள்ளப்பட்டது. நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு இன்னும் அரசினால் தீர்வு காண முடியவில்லை.

2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில், இலங்கை அரசு தன்னை திவாலானதாக அறிவித்தது, மேலும் இலங்கைக்கு உதவும் நம்பிக்கையை உலகம் இழந்தது. ஒரு ஜனாதிபதியை அவரது சொந்த மக்களே நாட்டை விட்டு ஓட ஓட விரட்டியடித்தனர். ஜனாதிபதி மாளிகை மற்றும் பிற அரசு கட்டிடங்களை மக்கள் முற்றுகையிட்டனர். இரண்டு வாரங்களாக நாடு இயங்காமல் இருந்தது. தமிழர்கள் இந்தப் பிரச்சனையைப் பார்த்தும் யாரோ ஒருவருடைய பிரச்சனையைப் போல் தங்கள் வாழ்க்கையை கொண்டு நடத்தினர்.

தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதே எளிமையான தீர்வு என்பது அனைவரும் அறிந்ததே. அது பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதுடன் நாட்டை சிறந்த இடமாக மாற்றும். எவ்வாறாயினும், இலங்கையில் இனவாதத்தை அடிப்படையாக கொண்ட பௌத்த மதம், புத்தபெருமானின் பெயரால் நாட்டை அமைதியான இடமாக மாற்ற ஒருபோதும் அனுமதிக்காது.

இன்னொரு முக்கியமான கேள்வி, இந்த 1983 கலவரத்தால் நமக்கு ஏதாவது கிடைத்ததா? பதில் “இல்லை” மற்றும் “ஆம்” என்று இரண்டு விதமாக இருக்கலாம். “இல்லை”, ஏனென்றால், இப்போது வரை அதே பிரச்சனை உள்ளது. பிரச்சினைகளை தீர்க்க எந்த நடவடிக்கையும் இன்றுவரை எடுக்கப்படவில்லை. மாறாக நாளுக்கு நாள் இனவாதம் மோசமாகி வருகிறது. 1983 இல் ஏறக்குறைய 150,000 பேர் வேலை இழந்தனர். கலவரத்திற்குப் பிறகு பல அரசு ஊழியர்கள் வேலைக்குத் திரும்ப முடியாமல் போனது எனக்கு நினைவிருக்கிறது. என் அண்ணாவும் நீண்ட நாடகள் வீட்டிலேயே இருந்துவிட்டு வேலைக்குப் போனார். ஆனால், அவருக்கு விரைவில் வெளிநாடு சென்று வேலை செய்ய வழி கிடைத்தது. இதேபோல் 100,000க்கும் மேற்பட்ட மக்கள் புலம் பெயர்ந்தனர்.

பல வீட்டு உரிமையாளர்கள் தங்கள் வீடுகளை மிக குறைந்த விலைக்கு விற்றுள்ளனர். எங்கள் மாமாவும் தனது வீட்டை மிகக் குறைந்த தொகைக்கு விற்றதாக நினைவு. அக்கம் பக்கத்தில் இருந்த சிங்கள மக்கள் மற்றவர்களை அதிக விலைக்கு வாங்க அனுமதிக்கவில்லை என்றார். குடும்பங்கள் பிரிந்தன, வயதான பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை மீண்டும் தங்கள் வாழ்க்கையில் பார்க்க முடியவில்லை. எனது நண்பர்கள் மற்றும் பள்ளித் தோழர்கள் பலர் புலிகளுடன் இணைந்து உயிர் தியாகம் செய்தனர். 1983 கலவரத்துடன் தொடங்கிய பிரச்சனை முள்ளிவாய்க்காலில் 142,00 பேரின் இனப்படுகொலையில் முடிந்தது.

”ஆம்”, இந்தக் கலவரம் மக்களின் வாழ்க்கையைப் பல வழிகளில் மாற்றியது. இந்த 40 வருடங்கள் எல்லாவற்றையும் தலைகீழாக மாற்றிவிட்டன. இரு சமூகத்தினருக்கும் வாழ்க்கையின் மதிப்பை போர் கற்பித்துள்ளது.

புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் தங்கள் கடின உழைப்பு, அர்ப்பணிப்பு, கல்வி ஆகியவற்றால் பல்வேறு நாடுகளில் நன்கு குடியேறி உள்ளனர். இப்போது புலம்பெயர்ந்தோர் அனைத்து நாடுகளிலும் கல்வி ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் மிகவும் சக்தி வாய்ந்தவர்க ளாக மாறியுள்ளனர். இலங்கை யின் அனைத்து கடன்களையும் அடைக்கும் திறன் அவர்களுக்கு இப்போது உள்ளது. உண்மையில், சிலர் கோடீஸ்வரர்களாக மாறியுள்ளனர். மேலும் அவர்கள் முழு இலங்கையையும் பணம் கொடுத்து வாங்கும் திறனைக் கொண்டுள்ளனர்.

இப்போது இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான கலவரத்தில் ஈடுபட யாராவது முயன்றால், புலம்பெயர்ந்த இளம் பிள்ளைகள் சக்தி வாய்ந்த பதிலடி கொடுப்பார்கள். புலம்பெயர்ந்த தமிழர்களின் முதல் தலைமுறையினர் கடுமையாக உழைத்து தங்கள் உயிரைத் தியாகம் செய்தனர். ஆனால், இப்போது இங்கு பிறந்த அடுத்த தலைமுறை குழந்தைகள் இளைஞர்களாகிவிட்டனர். தமிழர்களின் வரலாறு குறித்தும் படித்தவர்கள். தமிழர்கள் பலர் மருத்துவர்களாகவும், பொறியியலாளர்களாகவும், வழக்கறிஞர்களாகவும், அரசியல்வாதிகளாகவும் மாறிவிட்டனர். இதுவே சமயம், இலங்கை அரசும் மக்களும் தங்கள் அணுகுமுறையை மாற்றிக்கொண்டு அமைதியை கட்டியெழுப்ப முயற்சிக்க வேண்டும். அமைதியான இலங்கைக்கு தமிழர்களுடன் சமாதானம் செய்வதே ஒரே வழி.

மேலும், தமிழகம் மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளிலும் தொல்லியல் ஆய்வுகள் அதிகரித்திருப்பது தமிழர் தோற்றம் பற்றிய முக்கிய முடிவுகளை வெளிப்படுத்தியுள்ளது. பொய்யான தகவல்களைக் கொண்டு இலங்கை அரசு மறைக்க முயன்றாலோ அல்லது புதிய சரித்திரம் படைக்க முயன்றாலோ இன்னும் மேம்பட்ட தொழில்நுட்பம் அந்த நிலம் தமிழர்களுடையது என்பதை நிரூபிக்கும்.

அண்மையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தமிழ் பௌத்தத்தின் இருப்பை ஏற்று, தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளரைத் பதவி விலகுமாறு வற்புறுத்தினார். இது சமீப ஆண்டுகளில் ஒரு ஜனாதிபதியின் மனதில் ஏற்பட்ட முக்கியமான மாற்றமாகும். இவை இப்போது வரலாற்றில் பதிவாகியுள்ளன. தமிழர்களின் பூர்வீகம் ஹரப்பா மற்றும் மொஹஞ்சதாரோ காலங்களுக்கு முற்பட்டதாகக் காணப்படுகிறது. அந்த இடங்களில் காணப்படும் எழுத்துப் பிரதிகள் அல்லது வரைபடங்கள் கீழடி, தமிழ்நாட்டு தொல்லியல் தளங்களில் கண்டெடுக்கப்பட்ட பின்னர் ”தமிழி” எழுத்துக்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இதே எழுத்துருக்கள் இலங்கையிலும் பல இடங்களில் காணப்படுகின்றன. வெளியிடப்பட்ட பல பேச்சுக்கள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகள் தமிழர்கள் இந்தியா மற்றும் இலங்கையின் பூர்வீக மக்கள் என்பதை நிரூபிக்கின்றன.

அரசாங்கத்தின் அனுசரணை நடவடிக்கைகளால் இலங்கை முழுவதும் ஆயிரக்கணக்கான விகாரைகளை (பௌத்த ஆலயங்கள்) கட்ட முடியும், ஆனால், தமிழ் மற்றும் அதன் தோற்றம் பற்றிய அறிவியல் சான்றுகள் குவிந்து கிடப்பதால் எந்த பலனும் கிடைக்கப் போவதில்லை.

இதை எழுதுவதன் நோக்கம் எனது அனுபவத்தை பதிவு செய்து இலங்கை மக்களை நிரந்தர சமாதானத்தை நோக்கி உழைக்க வைப்பதாகும். பௌத்த துறவிகளை மத நடவடிக்கைகளுக்குள் அடக்குவதன் மூலமே இது சாத்தியமாகும். அனைத்து மதத் தலைவர்களும் அரசியல் மற்றும் அரசாங்கக் கொள்கைகளில் தலையிடுவதைத் தடுக்க வேண்டும். தமிழ், சிங்கள மக்கள் ஒன்றிணைந்து இதற்குத் தீர்வுகாண வேண்டும், இன்னும் காலனித்துவ மனப்பான்மையில் இருந்து வெளிவர முடியாத பழைய அரசியல்வாதிகளை தள்ளி வைக்க வேண்டும் அல்லது நாட்டை விட்டு துரத்த வேண்டும்.

இந்தக் கட்டுரை எழுதும்போது பலர் உதவி செய்தனர். மகேந்திரராஜா (இலங்கை), கமலினி (கனடா), கிருஷ்ணகுமார் (அமெரிக்கா), ஸ்ரீஸ்கந்தராஜா (கனடா) ஆகியோருக்கு என்னுடன் கலந்துரையாடி பல நினைவுகளை மீட்டமைத்ததற்காக நான் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன்.

நன்றி.
ஆடி 23, 2023






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.07.2023இல் வெளியிடப்பெற்றது.